දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

මගේ අංකය )
எனது இல )
My No. )CF/EXP/01/2020

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )2020/10/ 09
Date )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA
සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

---

**பொதுச் சுற்று நிருப இலக்கம்:** 02 / 88 / 2020

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
மத்திய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
உரிய நிறுவனத் தலைவர்கள்

**சுகாதார அமைச்சில் தொழிநுட்பம் சாராத ஆரம்ப தர சேவைப் பிரிவு PL - 01 - 2006 (ஏ) பதவிகளில் தரம் I இன் பொருட்டான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2020 (1வது தடவை)**

சுகாதார அமைச்சில் தொழிநுட்பம் சாராத ஆரம்பதர சேவைப் பிரிவு PL - 01 - 2006 (ஏ) இற்கு உரித்தான பதவிகளில் தரம் I ற்கு பதவி உயர்த்தப்பட்டு 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் திகதி இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படும்.

**02 தகைமைகள்**

சுகாதார அமைச்சில் தொழிநுட்பம் சாராத ஆரம்பதர சேவை வகை PL - 01 - 2006 (ஏ) பதவியொன்றில் (அலுவலகப் பணி உதவியாளர், பொதி செய்பவர், புத்தகம் கட்டுனர், சைக்கிள் ஏவலாளர், பாதுகாவலர், களஞ்சிய தொழிலாளி, மின் உயர்த்தி இயக்குனர், றோணியோ இயந்திர இயக்குனர், தெளிகருவி இயக்குனர், சுகாதார அலுவல்கள் உதவியாளர் (சாதாரண தரம்), சுகாதார அலுவல்கள் உதவியாளர் (கனிஷ்ட)) தரம் I ற்கு நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் இதுவரை இப்பரீட்சையினை பூரணப்படுத்தியிராத உத்தியோகத்தர்கள் மாத்திரம். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**(கவினிக்கவும் : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினமான 2020.10.28 ஆம் திகதியுடன் தரம் I யிற்கு நியமனம் பெற்று உரிய நியமனக் கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கவும்)**

**கவனிக்கவும்** : சுகாதாரச் செயலாளருடைய 2015.08.12 ஆம் திகதியஇ 02-09/2015 இலக்கமுடைய பொதுச் சுற்று நிருப கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2012.07.20ம் திகதியுடன் அலுவலகப் பணியாளர்கள், புத்தகம் கட்டுனர், பாதுகாவலர், தெளிகருவி இயக்குனர், சுகாதார அலுவல்கள் உதவியாளர் (சாதாரண தரம்), சுகாதார அலுவல்கள் உதவியாளர் (கனிஷ்ட) ஆகிய பதவிகளில் தரம் I இல் 05 வருட சேவைக்காலத்தைக் கடந்துள்ள உத்தியோகத்தர்கள் இந்தபரீட்சையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதால் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை. மேலும் சுகாதார செயலாளருடைய 2016.02.25 ஆம் திகதியஇ 02-90.'.2015 இலக்கமுடைய பொதுச் சுற்றுநிருப கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொதிசெய்பவர், கைக்கிள் ஏவலாளர், களஞ்சியக்காப்பாளர், மின் உயர்த்தி இயக்குனர், றோனியோ இயந்திர இயக்குனர் ஆகிய பதவிகளுக்கு முன்னைய ஆட்சேர்ப்புத்திட்டத்திற்கு அமைய 'வியடம் தொடர்பானஅறிவு' / தாபனவிதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணம் ஆகியவற்றில் ஒரு விடயத்தில் சித்தியடைந்திருந்தால் புதிய ஆட்சேர்ப்புத் திட்டம் அமுலுக்கு வரும் தினத்திலிருந்து வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடையத் தேவையில்லை.

03 **விண்ணப்பங்கள்**

இச்சுற்றறிக்கையின் இறுதியிலுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிறுவனத் தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சை), "சுவசிரிபாய", 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு -10 எனும் முகவரியை 2020.10.28 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்திலும் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என பிரிவுத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும். தங்களது விண்ணப்பப்பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முவரியிடப்பட்ட ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை 02 இனையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 08 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்படி மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

04 **பரீட்சைக் கட்டணம்**

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன்மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப்பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

05 **பரீட்சையின் பொருட்டு உட்பத்திக் கொள்ளுதல்**

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சைகுழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்குதோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினை உடன் கொண்டுவருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு அல்லது அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

06 பரீட்சைதிட்டம்

- இது ஒரு வாய் மூலப் பரீட்சையாகும். (பரீட்சை சபையொன்றினால் கேட்கப்படும் வினாக்களுக்கு வாய் மூலம் விடையளிக்க வேண்டும்)
- காலம் 15 நிமிடங்கள் ஆகும்.
- மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். சித்தியடைவதன் பொருட்டு 40மூ புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

07 **விடயப்பரப்பு:**

**பொது நிருவாகம் :**

முதலாம், இரண்டாம் வினைத்திறமைகாண் பரீட்சைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களுக்கு அமைவாக சேவைக்காலத்தினுள் உரிய துறைகளில் ஏற்பட்டுள்ள நடவடிக்கைமுறை, சட்டத் திருத்தங்கள் பற்றி ஊழியருக்கு இருக்கும் அறிவு மற்றும் அவரது பணிகளுடன் ஏற்புடைய நவீனமயப்படுத்தல்களில் அவருக்கு இருக்கும் திறமை என்பன அளவிடப்படும்.

08 பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல் இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09 தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை தங்களின் திணைக்களத்தில், நிறுவனத்தில், பிரிவில் சேவை புரியும் தொழிநுட்பம் சாராத ஆரம்பதர சேவைக்குழு PL - 01 - 2006 (ஏ) தரம் ஐ இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிற்கு தெரியப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (இந்ததகவல்கள் www.health.gov.lk என்னும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்)

கவனிக்கவும்: சிங்களம், தமிழ், ஆங்கிலமொழி மூல அறிவித்தல்களில் ஏதாவது ஒவ்வாமைகள் காணப்படுமாயின் சிங்களமொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

H. A. Kamal Pushpakumara
Deputy Director General (Administration) 02
Ministry of Health and Indigenous Medical Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

எச் ஏ கமல் புஷ்பகுமார
பிரதிச் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்)II
செயலாளருக்காக,
சுகாதார அமைச்சு.

**EXP**

அலுவலகஉபயோகத்தின் பொருட்டு

### மாதிரிவிண்ணப்பப் படிவம்

### சுகாதார அமைச்சில் தொழிநுட்பம் சாராத ஆரம்ப தர சேவைப் பிரிவு PL - 01 - 2006 (ஏ) பதவிகளில் தரம் I இன் பொருட்டான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2020 (1வது தடவை)

**01.** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்): ……………………………………………

……………………………………………………………………

(ii) விண்ணப்பதாரியின் பெயர் (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்):

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (தமிழில்): ……………………………………………

……………………………………………………………………

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

(ஆ) (i) பதவி : ……………………………………………………………………

(ii) தரம் Iற்கு பதவியுயர்த்தப்பட்ட / உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட கடித இலக்கமும் திகதியும்:

……………………………………………………………………

(iii) 2012.07.20ம் திகதியுடன் தரம் I இல் சேவைக்காலம் : ……………………………………

(iv) தற்போதுபெறும் வருடாந்த சம்பளம் : ……………………………………………

(v) கையடக்கத் தொலைபேசி இலக்கம்

(vi) தேசிய அடையாள அட்டை இல

**02.** (அ) தற்போது சேவைபுரியும் நிறுவனம் (ஆங்கிலத்தில்) : ……………………………………

(தமிழில்) ……………………………………………………………………

(ஆ) இந்தநிறுவனம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசினால்

மாகாண சபையினால்

(இ) மாகாண சபையாயின் உரிய மாகாணம் :……………………………………………

(ஈ) அதற்குரிய மாவட்டம் : ……………………………………………………………

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9”x4” அளவு ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறைகள் இரண்டு (02) இணைக்கப்பட்டு உள்ளதா? ……………………………………………

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்): ……………………………………………………

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்): ……………………………………

**03.** பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் /தமிழ் /ஆங்கிலம்): ……………………………………

**04.** (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ……………………………………………

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா ?

**முத்திரைக்கூண்டு**

**05.** **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் /முதற் தடவை அல்லாத படியால் ரூபா 25.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப் படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாததும் மதிப்புடையதுமான முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார அமைச்சினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி :.............................                    ...........................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

**06.** **தனிநபர் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் உறுதியுரை**

இந்த விணணப்பம் விண்ணப்பம் பாரமேற்கப்படும் இறுதி தினத்திற்கு முன்னர் என்னிடம் கிடைக்கப்பெற்தென்றும், தனிநபர் கோவையில் உள்ளதகவல்களுக்கு அமைய விண்ணப்பதாரி இந்த விண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தியுள்ளதாகவும், இந்தவிண்ணப்பத்தில் பிரதி தனிநபர் கோவையில் கோவையிடப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................

திகதி :                    பெயர், கையொப்பம்

**07.** **நிறுவனத்தலைவரின் கையொப்பம்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் ............................................. என்பவரினை நான் நன்கு அறிவேன் என்றும் இவர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவை என்பதால் முத்திரை ஒட்ட தேவையில்லை என்றும் /முதற்தடைவ அல்லாத படியால் ரூபா........... முத்திரை ஒட்டப்பட்டுள்ளது என்றும், விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் இவருடைய சுயவிபரக் கோவைக்கு அமைவாக சரியானவை என்றும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்தி செய்துள்ளார் என்றும் என் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:..............................                    ....................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

(இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்)

**08.** **விசேடபிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் ............................................ என்பவர் எனது நிறுவனத்தில்....................................... உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்னும், விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்திசெய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:................................                    .......................................................

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு /விசேட பிரிவுதலைவரின் கையொப்பம்

(இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்)